பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 20 (2—5—58) வியாழன் ★ வெளியூர்: சித்திரை 21 (3—5—68) வெள்ளி [இதழ்: 266

மே நாள் விடுமுறை -- டில்லி அரசிடம் எதிர்க் கட்சிகள் வற்புறுத்தல்

மே 1-ம் நாளைப் பொதுவிடுமுறையாக அறிவிக்குமாறு கோரி, 25 மக்களவை உறுப்பினர்கள், தலைமையமைச்சருக்குக் கடிதம் ஒன்று அனுப்பியுள்ளனர்.

"உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை வலியுறுத்தும் இந்த நாள், அனைத்து நாட்டுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; எனவே, நாடு முழுவதிலும் அன்று பொது விடுமுறை விடுவது பொருத்தமானதாகும்" என்று அவர்கள், அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

உழைப்பின் மதிப்பே உலகின் விலை

இயற்கைச் செல்வங்களையெல்லாம் செயற்கைச் செல்வங்களாக்குவோம்

வேறுபாடுகளை ஒதுக்கிவைத்துவிட்டு உரிமைக்குரல் எழுப்புக

தொழிலாளர்கட்கு அமைச்சர் நெடுஞ்செழியன் வேண்டுகோள் --- சென்னை மே விழாவில் உரை

சென்னை, மே 2—

"இந்த நாட்டில் இயற்கைச் செல்வங்கள் ஏராளமாக இருக்கின்றன; அந்த இயற்கைச் செல்வங்களெல்லாம் செயற்கைச் செல்வங்களாக மாற வேண்டும்; அப்படி மாறினுல்தான் நம்முடைய தேவைகளெல்லாம் நிறைவேறும்; நம்முடைய நேரம்--நினைப்பு--உழைப்பு--அறிவு--திறமை அனைத்தும் அதற்காகவே செலவிடப்பட வேண்டும்; 'மெல்ல மெல்ல அத்தகையதொரு சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும்' என்ற சூளுரையை இந்த மே நன்னாளில் எடுத்துக்கொள்ளுவோமாக"

என்று தி. மு. கழக அவைத் தலைவரும், கல்வி--தொழிலமைச்சருமான திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நேற்று மாலை கடற்கரையில் நடைபெற்ற அனைத்துக் கட்சி மே நாள் விழாப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தி. மு. க. அமைப்புச் செயலாளர் திரு. என். வி[illegible]ராசன் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், மேயர் டாக்டர் அபிபுல்லா[illegible] திரு. ம. சி. கிருஷ்ணமூர்த்தி (தமிழரசுக் கழகம்), முன்னுள் மேயர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, வி. பி. [illegible] (இடது கம்யூனிஸ்டு), ஆ. வா. இ. ராவ் (சம்யுக்த சோஷலிஸ்டு), கே. டி. கே. தங்கமணி (வலது கம்யூனிஸ்டு) ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். திரு. நீலநாராயணன் அனைவரையும் வரவேற்றுப் பேசினுர்.

அனைத்துக் கட்சித் தோழர்கள்--தொழிற் சங்கங்கள்--பொதுமக்கள் பலரும் கலந்துகொண்ட மாபெரும் ஊர்வலத்திற்குப்பின் நடைபெற்ற இம்மாபெரும் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் பேசுகையில் கூறியதாவது :—

உழைப்பின் அளவைத்தான் விலையாக மதிப்பிட இயலும்!

இமயமலையை, இங்கு நான் நின்றுகொண்டு ஏலம் விடுவேனேயானுல், அதை ஒரு காசுக்குக் கூட ஏலம் எடுப்பவர் இங்கே யாரும் இருக்க மாட்டார்கள்.

அதேபோல், தூத்துக்குடிக் கடலில் இருக்கும் முத்துக்களை இங்கு நின்றுகொண்டு நான் ஏலம் விட்டால் அவற்றை இரண்டு காசுச்குக்கூட இங்கு யாரும் ஏலம் கேட்க மாட்டார்கள்!

இமயமலையில் உள்ள கனிச் செல்வங்களை எடுத்து, அவற்றைப் பயன்படுத்தத்தக்க விதத்தில் இங்கே கொண்டுவந்தால் தான், அவற்றிற்கு உண்மையான மதிப்புக் கிடைக்கும்.

அதேபோல், தூத்துக்குடிக் கடலுக்குள் மூழ்கி முத்துக்களை எடுத்து—அதற்காகச் செலவிட வேண்டிய உழைப்பு, ஆற்றல் அத்தனையையும் செலவிட்ட பின்னர்தான், முத்துக்குக் கிடைக்கும் மதிப்பு—விலை கிடைக்கும்.

'இந்த உலகின் விலை என்ன' என்ருல், இந்த உலகில் நாமும் நமது முன்னோர்களும் உழைத்திருக்கின்ற உழைப்பின் அளவைத்தான் விலையாகக் கூறமுடியும்!

எனவே, இந்த உலகம், உழைப்பாளருக்குத்தான் சொந்தம்—வீணில் உண்டு களித்திருப்போருக்கு இல்லை!

ஆகையினுலேதான் பாரதியார் சொன்னர் — 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்; வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்' என்று!

திருவள்ளுவர்கூட, 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்--தொழுதுண்டு பின் செல்வர்' என்றுதான் கூறியிருக்கிருர்.

நாம் இன்னொரு முறையில்கூட இந்தக் குறளை மாற்றிச் சொல்லலாம்; 'உழைத்துண்டு வாழ்வாரே வாழ்வர்; மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்வர்' என்று! இதனுல், செய்யுளின் சீர், தளைகூட மாருது; மிகப் பொருத்தமாக இருக்கும்.

எனவே, 'உழைப்புக்குத்தான் மதிப்பு' என்பதை நாம் இந்த நாளில் எடுத்துக்காட்டுகிருேம்!

காலம் மாறியது-- புரட்சியும் தோன்றியது!

ஒரு காலத்தில், முதலாளி இட்ட வேலையைத் தொழிலாளி செய்து தீரவேண்டும்; அவன் கொடுத்த காசைத்தான் பெற்றுக்கொள்ள வேண்டும்.

'முதலாளியாகவும், தொழிலாளியாகவும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள்; தலை விதிப்படியே முதலாளி சுகவாழ்வு அனுபவிக்கவும், தொழிலாளி உழைத்துப் பிழைக்கவும் நேரிட்டிருக்கிறது' என்று ஒரு மூட நம்பிக்கை நிலவியது.

காலம் மாற மாற, தொழிற் புரட்சியும் அறிவுப் புரட்சியும் தோன்றியதன் விளைவாக, அறிவியல் துணைகொண்டு இந்த அண்டத்தைப் பற்றி புரிந்துகொள்ள ஆரம்பித்த பின்னர்தான், மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது; 'ஏன்? எதற்கு? எப்படி?' என்று வினு எழுப்பும் அறிவுப் புரட்சியின் பலன்தான், தொழிலாளர்கள், உரிமைச்குப் போராடத் தொடங்கியது!

'உழைக்க 8-மணி நேரம்; உறங்க 8-மணி நேரம்; ஓய்வு பெற--உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க 8-மணி நேரம் தேவை' என்று உணரப்பட்டு, அதற்காக உரிமைக் கிளர்ச்சிகளெல்லாம் நடைபெற்று வெற்றியும் கிடைத்தது!

இப்போது, 'அந்த 8-மணி நேரம் கூடத் தேவையில்லை; 7-மணி நேரம்— 6-மணி நேரம் உழைத்தால்கூடப் போதும்; வாரத்தில் இரண்டு நாட்கள் விடுமுறை விட்டு 5-நாட்கள் உழைத்தால் போதும்' என்ற கருத்து வற்புறுத்தப்பட்டு, சிற்சில நாடுகளில் இதை அமுல்படுத்தும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

'தேவை' என்பது அனைவருக்கும் ஒன்று!

ஒருவருக்குக் கையில்லாமல் இருக்கலாம்; கால் இல்லாமல் இருக்கலாம்; வேறு சில உறுப்புக்கள் இல்லாமல் இருக்கலாம்; ஆனுல் வயிறு இல்லாமல் எவரும் இருக்கமாட்டார்!

வேறு தேவைகளைக்கூடத் தவிர்த்துக் கொள்ளலாம்; வயிற்றுக்குத் தேவையான உணவைத் தவிர்க்க முடியாது.

'கை இல்லை' என்பதற்காக வயிற்றுக்கு ஓர் இட்டிலி குறைவாகச் சாப்பிட முடியாது. எத்தனை இட்டிலி தேவையோ அத்தனை இட்டிலியும் சாப்பிட்டுத்தானுக வேண்டும். எனவே, தேவை எல்லோருக்கும் ஒன்றுதான்; கை, கால் இல்லாதவர்கள் உழைக்க முடியாவிட்டாலும், உணவு உண்டுதானுக வேண்டும்.

எனவே, எல்லோருக்கும் வயிருர உண்ண உணவும், மானமார உடுத்த உடையும், வசதியாக வாழ இடமும் தேவை.

அவரவர், தங்கள் சக்திக்கேற்ற உழைப்பும், தேவைக்கேற்ற வசதியும் பெற்ருக வேண்டும்.

இவற்றைப் பெறக்கூடிய நிலைமை இன்னமும் நமது நாட்டில் ஏற்படவில்லை!

வளங்கள் இருக்கின்றன--- தொடர்புகள் இல்லையே!

நமது நாட்டில் நல்ல நில வளம் உண்டு—நிலத்திலே கனி வளம் உண்டு; காடுகள் உண்டு; மலைகள் உண்டு—மலையிலே பல இயற்கை வளங்கள் உண்டு; முப்பக்கமும் கடல்களுண்டு—கடல்களிலே நிலத்தில் உள்ளதைவிட அதிகப் பயன்தரக் கூடிய கடல் வளங்கள் உண்டு.

ஆனுல், இவையனைத்தும் வெறும் வளங்களாகவே இருக்கின்றன! நாம் நாமாகவே இருக்கின்ருேம். வளங்களுக்கும் நமக்கும் தொடர்பு இல்லாமலே இருந்து வருகிறது.

சேர்வராயன் மலையில் உள்ள இரும்புக் கனியை வெட்டியெடுத்து நெய்வேலியில் உள்ள நிலக்கரியைக் கொண்டு உருக்கினுல்தான் நமக்கு இரும்பு கிடைக்கும்.

அதேபோல், அணுச்சக்திக்குப் பயன்படக்கூடிய யூரேனியம், தோரிடம் போன்ற ஒளிப் பொருள்கள் கலந்த மண்ணை எடுத்துப் பயன்படுத்தினுல்தான் பலன் உண்டு!

வசதியும் உரிமையும் நமக்கு அவசியம்

இங்கு இரண்டரை ரூபாய்க்கு வாங்கிய பழைய இரும்பை ஜப்பானுக்கு எடுத்துச் சென்று, அதை 2,500 ரூபாய் பெறுமான ஒலிபெருக்கியாக ஆக்கி நம்மிடமே விற்கிருர்கள் என்ருல், ஜப்பானில் 'அறிவுக்கும் உழைப்புக்கும், தொடர்பு இருக்கிறது' என்றுதான் பொருள்!

அந்த நிலை நமக்கு ஏற்பட வேண்டும். நாமே அந்த ஒலிபெருக்கியை இங்கே செய்துகொள்ளக் கூடிய வசதியும் உரிமையும் நமக்கு இருக்க வேண்டும்.

இன்று மேதினியெங்கும் இந்த மே நாள் விழாக் கொண்டாடப் படுகிறது.

டோக்கியோவிலும் கொண்டாடுகிருர்கள்; சான்பிரான்சிஸ்கோ நகரிலும் கொண்டாடுகிருர்கள்; மாஸ்கோவிலும் கொண்டாடுகிருர்கள்; பாரிசிலும், ரோமிலும் கொண்டாடுகிருர்கள்! எங்கெங்கே உழைப்போர் இருக்கிருர்களோ, அங்கெல்லாம், எந்தவித வேறுபாடும் இல்லாமல் கொண்டாடப்படுகிறது.

இங்கே, முற்போக்குக் கருத்துக் கொண்ட கட்சிகளும், தொழிலாளர் சங்கங்களும் சேர்ந்து கொண்டாடுகிருேம். 'தொழிலாளர்' என்ற முறையில், எல்லோருமே ஒன்றுதான்! நமக்குள்ளே பல வேறுபாடுகள் இருக்கலாம்; பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், பல்வேறு சமயச் சார்புடையோரும், இருக்கலாம்; ஆனுல், 'தொழிலாளர்' என்ற முறையில் எந்தவித வேறுபாடும் இல்லை. எனவே தொழிற்சங்கத்தில் அனைவரும் ஒரே கருத்துக் கொண்டவராக இருக்கவேண்டும். தொழிலாளர் உரிமைக்காக எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானுலும் பாடுபடலாம்—போராடலாம். 'இவர் இன்ன கட்சியைச் சேர்ந்தவர்; எனவே, இவர்தான் தொழிலாளருக்காகப் பாடுபட வேண்டும்' என்பதில்லை. தொழிற்சங்கப் பணியை எல்லோராலும் செய்யவும் முடியாது. அதற்கெனப் பயிற்சியும் அனுபவமும் திறமையும் உள்ளவர்கள்தான் அதில் ஈடுபட முடியும்.

எனவே, 'இதனை, இதனுல் இவன் முடிக்கும் என்ருய்ந்து, அதனை அவன் கண்விடல்' என்ற குறளுக்கேற்ப, யார் எதற்குத் தகுதியுடையவர்களோ அவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

யாரும, எந்த அரசியல் கருத்தையும் விட்டுவிட வேண்டாம்; ஆனுல், 'தொழிற்சங்கம்' என்ற அமைப்புக்குள் வந்துவிட்ட பிறகு, அந்தக் கருத்தை ஒதுக்கிவைத்துவிட வேண்டும். தொழிற் சங்கப் பணி முடிந்ததும் தங்கள் அரசியல் கருத்தை எடுத்துக் கொள்ளலாம்.

ஒன்றுபட்டுப் பணியாற்றும் வாய்ப்பை உருவாக்குவோம்

'ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம்தான் இருக்கவேண்டும்' என்ற கருத்து நல்லதுதான்; நானும் அதை ஆதரிக்கிறேன்,

ஆனுல், அவரவர் அரசியல் கொள்கைகளைக் கைவிட்டு, ஒன்று சேருவது என்பது இப்போது அவ்வளவாக வெற்றி பெருது, யாரும் அப்படி விட்

(4-ம் பக்கம் பார்க்க)

'அமெரிக்க மக்களுக்கு தமிழக மக்களின் அன்பளிப்பு

தமது அமெரிக்க வருகைக்கு ஒரு நினைவுப் பொருளாக அமெரிக்க மக்களுக்கு அண்ணு அவர்கள், ஒரு சந்தனப் பெட்டகம் வழங்கியுள்ளார்.

அரிய கைவினைத் திறன் விளங்கும் பெட்டி இது; நான்கு புறங்களிலும் சிறிய உருவங்களும், மூடியில் யானைகளின் உருவங்களும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன.

சிறப்புமிக்க விருந்தாளிகள் பலர் வழங்கியுள்ள அன்பளிப்புகள் வெளி உறவுத் துறையின் பரிசுப் பொருட்கள் அறையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

'புதிய அன்பளிப்பு, மேலும் சிறப்பளிக்கும்' என்று அதை ஏற்றுக்கொண்ட வெளி உறவுத் துறை அதிகாரி ஒருவர் தமிழக முதலமைச்சரிடம் கூறினுர்.

முதலமைச்சர்அண்ணு அவர்களின் விருப்பப்படி, 'அமெரிக்க மக்களுக்குத் தமிழக மக்களின் அன்பளிப்பு'

என்று இந்தப் பெட்டகத்தில் சீட்டு ஒட்டப்படும்.

கடந்த ஞாயிறு மாலை, தலைநகர் வாஷிங்டனிலிருந்து புறப்படுவதற்கு முன்பு இந்த அன்பளிப்பு வழங்கப் பெற்றது.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 சித்திரை 20 (2—5—68) வியாழன்

காமராசர் பொறுப்புள்ளவராக இருந்தால்!

1967 பிப்ரவரித் திங்களில், இருபதாண்டுக்கால காங்கிரசு எதேச்சாதிகார ஆட்சிக்குத் தமிழக மக்கள் முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர்.

'கூட்டம் அங்குதான் கூடும்; ஆனால், மக்கள் ஓட்டு மட்டும் நமக்குத்தான்' என்று, கேலி கலந்த ஆணவப் பேச்சுப் பேசிவந்த காங்கிரசு மாபெரும் தலைவர், தேர்தல் முடிவு கண்டு அதிர்ச்சியடைந்தார்.

'ஆட்சிப்பீடத்தில் என்றும் நாம்தான் அமர்ந்திருக்கப் போகின்றோம்' என முடிவுகட்டி இருந்த பக்தவத்சலனார் அவர்கள் உட்பட காங்கிரசு அமைச்சர்கள் அனைவரும், தேர்தல் முடிவைக் கண்டதும் குழப்பத்திலாழ்ந்தனர்.

'அதிகாரமில்லாத வாழ்வு ஒரு வாழ்வா' எனத் தங்களுக்குத் தாங்களே கேட்டுக்கொண்டு, அழுது புலம்பலாயினர்.

தாங்கள் அரியணையில் அமர்ந்திருந்த நாளில், தங்களுக்குக் கிடைத்துவந்த சீரையும் சிறப்பையும் நினைத்து நினைத்து நெஞ்சம் குமுறலாயினர்.

அதிகாரம் தங்கள் கையைவிட்டுப் போய்விட்டதும், அரசுக் கட்டிலில் அமர்ந்திருந்தவரையில் தங்களைச் சுற்றி நின்று இச்சகம் பேசிக்கொண்டிருந்த 'டம்பாச்சாரிகள்' அனைவரும், தங்களை நடமாடும் பிணங்களாகவும் அரசியல் அனாதைகளாகவும் ஆக்கிவிட்டு, ஏற்ற புகலிடம் தேடிப் போய்விட்டதை எண்ணி எண்ணி மனம் புண்பட்டுப் போயினர்.

தாங்கள் தனித்து வெளியில் செல்லவும், அவ்வாறு தாங்கள் தனித்துச் செல்லுகின்ற நேரத்தில் தங்களைச் சிலர் ஏளனமாகப் பார்ப்பதையும், சிலர் எரிச்சலோடு நோக்குவதையும், சிலர் அலட்சியமாகப் பார்ப்பதையும், சிலர் கண்டும் காணாதவர்கள்போல செல்வதையும், சிலர் இரக்கத்தோடு பார்த்துவிட்டுச் செல்வதையும் அன்று கோலோச்சிய காங்கிரசுக் கோமான்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அரசியல் துறையில் இத்தகைய தாழ்ந்த நிலைக்குத் தங்களைத் தள்ளிவிட்டு, அதற்குப் பதிலாக, தங்களால் 'நாடாளும் தகுதியில்லாதவர்' எனக் கருதப்பட்டுவந்த கழகத்தவர்களை அரசுப் பீடத்தில் உட்கார வைத்து, கழகத்தவர் ஆட்சிக்கு நல்லாதரவு கொடுத்துக் கொண்டுவருகின்ற மக்கள்மீது, ஏற்கனவே நாடாண்ட அந்த நல்லவர்களுக்கு ஆத்திரம் பொங்கிவழிந்தது.

அப்படிப் பொங்கிவழிந்து கொண்டிருக்கும் ஆத்திரத்தை, தங்களை நடுத் தெருவில் நிற்கவைத்துவிட்ட மக்கள்மீது காட்டிக் கொள்ளுவதற்குமில்லை—அந்தக் காங்கிரசு நல்லவர்களுக்கு!

எனவே, மக்கள் மீது ஏற்பட்டிருக்கின்ற ஆத்திரத்தை முழு அளவில் திரட்டி, கழக அரசின்மீது ஏவிவருகின்றனர் -- அந்த நல்லவர்கள்!

இப்படி, கழக ஆட்சிமீது தூற்றல் கணைகளைத் தொடுத்து வருவதில் பெருந் தலைவர் காமராசரும், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியமும், முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலனாரும், மற்றவர்களுக்கு வழிகாட்டும் முன்னோடிகளாக உள்ளனர்.

'இழந்ததைப் பெற வேண்டும்' என்ற கருத்துடைய காமராசர் அவர்கள், கழக ஆட்சியின்மீது சேற்றை வாரி இறைத்தவண்ணம் உள்ளார்.

கழக ஆட்சிக்கு எதிராக மாணவர்களை ஏவிவிட், முதல் முயற்சியாக அரும் முயற்சியை மேற்கொண்டார் அப் பெருந் தலைவர்!

மாணவர்களை வைத்து, கழக ஆட்சியைக் களங்கப்படுத்தக் காமராசர் தீட்டிய திட்டம் கருவிலேயே சிதைந்துபோய்விட்டது.

முதல் முயற்சியிலேயே முழுத் தோல்வியைத் தழுவிக் கொண்டுலிட்டார் காமராசர்!

அடுத்து, இப்பொழுது பழங்குடி மக்களை, கழக ஆட்சிக்கு எதிராகக் கிளப்பிவிட முனைந்திருக்கின்றார் அவர்!

இம்முயற்சியின் முதற்படியாக, சில நாட்களுக்குமுன் ஏதோ ஒரு தேநீர்க கடையில் நடைபெற்றது என்ற கதையைக் கூறி, 'கழக ஆட்சி பழங்குடி மக்களின் நலனுக்கு எதிரான ஆட்சி' எனப் பழிசுமத்திப் பேசினார் காமராசர்!

இப்பொழுது, அப்படிப் பழி கூறுவதில், தாம் மேலும் ஒரு படி முன்னேறியிருப்பதைக் காட்டிக்கொள்ள, வேறு ஒரு கற்பனைக் கதையைக் காமராசர் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்.

"சாதி இந்துக்கள் குடியிருக்கும் பகுதியில் வீடு கட்டிக் கொண்ட ஒரு தாழ்த்தப்பட்ட குடிமகனை கட்டிவைத்து அடித்ததில் அவர் இறந்துவிட்டார். இதை, 'தற்கொலை' என்று போலீசார் பதிவு செய்திருக்கிறார்கள்."

இதுதான், காமராசர் கூறியுள்ள கற்பனை நிகழ்ச்சி. மேலும் அவர் தொடர்ந்து கூறியிருப்பதாவது :—

"அவரை (தாழ்த்தப்பட்ட குடிமகன்) கட்டிவைத்து உதைத்திருக்கிறார்கள்; அவர் இறந்துவிட்டார்; போலீசில், அவர் தற்கொலை செய்துகொண்டதாகப் பதிவு செய்திருக்கிறார்கள். டாக்டர் அப்படிக் குறிப்பிட மறுத்தும்கூட நடந்திருக்கிறது."

சாதி இந்துக்கள் குடியிருக்கும் பகுதியில் வீடு கட்டிக் கொண்ட அந்தத் தாழ்த்தப்பட்ட குடிமகன் யார்?—காங்கிரசுக் கட்சிப் பெருந்தலைவர், பெயரைக் குறிப்பிடவில்லை.

அந்த ஊர் எது?—இதுபற்றியும் காமராசர் ஒன்றும் சொல்லவில்லை! ஆனால், 'ஊர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை' என்று மட்டும் அந்தப் பெருந்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தாழ்த்தப்பட்ட குடிமகனை அடித்துக் கொன்றவர்கள் யார், யார்?—காமராசர் விளக்கிக் கூறவில்லை!

அடித்துக் கொல்லப்பட்டதை 'தற்கொலை' எனப் பதிவு செய்திருக்கின்ற போலீசு நிலையம் எது போலீசு அதிகாரி யார்?—இதற்கும் காமராசர் விளக்கம் தரவில்லை!

ஆனால் இறுதியாக,

"இம்மாதிரியெல்லாம் நடக்கிறது. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு, 'நமக்கென்ன' என்று யாரும் இருக்கக்கூடாது"

என்று, தமது அண்டப்புளுகைக் கேட்டுக்கொண்டிருந்த காங்கிரசு வழக்குரைஞர்களிடம், பெருந்தலைவர் காமராசர் அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்!

ஊரைச் சொல்லமாட்டார்—தாழ்த்தப்பட்ட குடிமகனின் பெயரைச் சொல்லமாட்டார் கொலையை, 'தற்கொலை' எனப் பதிவுசெய்த போலீசு நிலையத்தையோ அதிகாரியையோ குறிப்பிடமாட்டார் இதற்குத் தூண்டினவர்களையும் கூறமாட்டார் — 'தற்கொலை' எனச் சான்று கூற மறுத்த டாக்டர் யார் என்பதையும் வெளிப்படுத்தமாட்டார் -பொறுப்புள்ள பெருந்தலைவர் காமராசர்!

ஆனால், 'இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு நமக்கென்ன என்று யாரும் இருக்கக்கூடாது' என்று மட்டும், தமது கற்பனைக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்த காங்கிரசு வழக்குரைஞர்களுக்கு மட்டும் போதனை புரிவார் காமராசர்!

"ஏனையா! பெருந் தலைவர் காமராசர் அவர்களே! கொலையை, 'தற்கொலை' எனக் காவல்துறையினர் பதிவு செய்துள்ளது சட்டவிரோதமானதல்லவா? நீதி கிடைத்திடச் செய்திட வேண்டாமா? தங்களைப் போன்ற பொறுப்புள்ள தலைவரின் கடமை அதுதானே? ஏன் கடமையைச் செய்யாது, இதுவரை காலங்கழித்து வந்திருக்கிறீர்? நீங்கள் செய்ய விரும்பாததை -- செய்யத் தவறியதை -- எங்களை மட்டும் ஏன் செய்யச் சொல்லுகிறீர்கள்? பொறுப்புள்ள அரசியல் தலைவருக்கு இது அழகல்லவே!"

என, காமராசர் அவர்கள் கூறிய கட்டுக்கதையைக் கேட்டுக் கொண்டிருந்த வழக்குரைஞர்கள் கேட்டிருக்க வேண்டும். அப்படி கேட்டிருக்கும்பட்சத்தில் காமராசர், ஒன்று பதில் கூறி இருக்க வேண்டும் – அல்லது, 'கூறியது வெறும் கற்பனை' என்றுவது ஒப்புக்கொண்டிருக்க வேண்டும்.

"கேட்டுக்கொண்டிருந்தவர்கள், வழக்குரைஞர்களாக மட்டுமே அங்கு கூடியிருக்கவில்லையே! 'காங்கிரசு' என்ற முத்திரையையும் அல்லவா அவர்கள் தங்கள் நெற்றியில் பதித்துக் கொண்டிருந்தனர்?

பொறுப்புள்ள தலைவராகக் காமராசர் இருக்கும்பட்சத்தில், ஒளிவுமறைவு இல்லாமல் உண்மையைக் கூறி, நீதி நிலைத்திடச் செய்ய முனைந்திடல் வேண்டும். இனியும் இதைச் செய்யாது அவர் இருந்திடும்பட்சத்தில், 'கழக ஆடசிககு எதிராக எந்தத் தாழ்த்தப்பட்ட குடிமக்களை ஏவிவிட முயற்சித்துள்ளாரோ, அதே தாழ்த்தப்பட்ட குடிமக்கள், குற்றுயிரும் கொலையுயிருமாக இருந்து வருகின்ற காங்கிரசுக் கட்சியை, மேலும் ஆழக் குழி தோண்டிப் புதைத்திட முனைவர் என்பதை, இந்தப் பெருந்தலைவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

காமராசர் பொறுப்புள்ள தலைவராக இருந்தால், உண்மையைக் கூறி, நீதியை நிலைநாட்ட முன்வரட்டும். காலம் தாழ்த்த வேண்டாம்.

— கா. க.

அரசு துவக்கும் புதிய கல்லூரிகள்

சென்னை, ஏப். 30—

வரும் கல்வி ஆண்டிலிருந்து (1968—69) ஐந்து புதிய அரசாங்கக் கல்லூரிகள் துவக்கப்படும் என்று அதிகாரபூர்வமாக அறியப்படுகிறது.

அவற்றில் மூன்று ஆண்களுக்கும், இரண்டு பெண்களுக்குமானவை; அவை கீழ்க்கண்ட இடங்களில் இருக்கும் :—

நாமக்கல் (ஆண்கள்);
இராசிபுரம் (ஆண்கள்);
விழுப்புரம் (ஆண்கள்);
வாலாஜா (பெண்கள்);
திருநெல்வேலி (பெண்கள்).

துவக்கத்தில் புகுமுக வகுப்புகளுடன் குறைந்தபட்சம் 80 மாணவர்களைக்கொண்டு இருக்கும்.

திருச்சியில் வருகிற கல்வி ஆண்டிலிருந்து ஒரு புதிய கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்படும்.

திருச்சி—தஞ்சை சாலையிலுள்ள காட்டூரில் அதை நிறுவ உருமு சேஷாசலம் அறக் கட்டளை முன் வந்துள்ளது.

இது, திருவெறும்பூர் கொதிகலன் ஆலை குடியிருப்பில் உள்ள மாணவர்களுக்கு வசதியாக இருக்கும்.

'ஏ டி-டி. 27' ரகத்தையும் மிஞ்சும் 'ஐ ஆர். 8'

தமிழக அரசு அறிமுகப்படுத்தும் மிகு விளைச்சல் தரும் நெல் ரகம்

சென்னை, ஏப். 30—

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காகத் தமிழக அரசு அறிமுகப்படுத்திவரும் வீரிய நெல் விதை ரகங்களில், 'ஐ.ஆர். 8' எனும் ரகம், மிகவும் புகழ் பெற்று வருகிறது.

இந்த ரகத்தைச் செங்கற்பட்டு மாவட்டத்தில் அறிமுகப்படுத்துவதில், மாநில விவசாயத்துறை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்த மாவட்டத்தில், 1966–67-ம் ஆண்டில்தான், அதிக விளைச்சல் தரும் ரகங்களைச் சாகுபடி செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அனைத்து நாட்டு அரிசி ஆராய்ச்சிக் கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது இந்த விதை. 'ஐ. ஆர். 8' ரக விதைகளைப் பயிரிடுவதன்மூலம் ஏக்கர் ஒன்றுக்கு 3 மெட்ரிக் டன் சாதாரணமாக கண்டுமுதலாகிறது; சில விவசாயிகள் 4 டன் வரை கண்டுமுதல் செய்துள்ளனர்.

புரட்சிகரமானது என்று கூறப்பட்டுவந்த 'ஏ.டி.டி. 27' ரகத்தினால் கிடைத்த விளைச்சல் ஏக்கருக்கு 2 டன்கள்தான்; 'சி. ஓ. 25' மூலம் 2.2 டன்னும், 'சி. ஓ. 29' மூலம் 1.8 டன்னும்தான் கிடைத்து வந்தது.

செங்கற்பட்டு மாவட்டத்தில் இந்த நவரை பருவத்தில் 8,000 ஏக்கர் அளவுக்கு இந்த 'ஐ.ஆர். 8 நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில் 3,000 ஏக்கர் திருவள்ளூர் வட்டத்தில் உள்ளது.

பல்வேறு மொழிகளில் பதவி உறுதிமொழி

புதுடில்லி, ஏப். 29—

நாடாளுமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் இன்று பதவி உறுதி எடுத்துக்கொண்டனர்.

தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கழக உறுப்பினர்களான தில்லை வில்லாளன், ஜி ஏ. அப்பன், முஸ்லீம் லீக் உறுப்பினர் காஜா மொய்தீன், இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் எம். ஆர். வெங்கடராமன் ஆகிய நால்வரும் தமிழில் பதவி உறுதி எடுத்துக் கொண்டனர்.

மற்றும்—ஆங்கிலம், இந்தி, மராத்தி, மலையாளம், கன்னடம், ஒரியா, உருது ஆகிய மொழிகளிலும் பலர் பதவி உறுதி எடுத்துக் கொண்டனர்.

காந்தி நினைவு ரூபாய் நோட்டுகள்

புதுடில்லி, ஏப். 30—

"அடுத்த ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள்—மகாத்மா காந்தியின் நூறுவது ஆண்டு பிறந்த நாள் விழாவையொட்டி, ரூ. 1-முதல் ரூ. 100 வரை காந்தி நினைவாகச் சிறப்பு ரூபாய் நோட்டுகள் வெளியிடப்படும்"

என்று நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், 'ரூ. 10; ரூ. 1; 50 காசு; 20 காசு நாணயங்களும் வெளியிடப்படும்' என்றார் அவர்.

தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கு அரசு மானியம்

75 சதவிகிதமாக அதிகரிப்பு

சென்னை, ஏப். 30—

தனியார் துறைப் பொறியியற் கல்லூரிகளுக்கும், தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் அரசினர் தரும் மானியத்தின் அளவு உயர்த்தப்பட்டுள்ளது.

உண்மையில் செலவாகும் தொகையில் 66 2/3 சதவிகிதமாக இருந்த மானியம் 75 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த உயர்வு மூலம் இந்த வகையில அரசின் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ 3.9 இலட்சமாக உயரும்.

இந்த மாநிலத்தில் 4 பொறியியல் கல்லூரிகளும், 18 தொழிற்பயிற்சி நிலையங்களும் தனியார் நிர்வாகத்தில் நடைபெறுகின்றன.

குறைந்த செலவில் குடியிருப்புகள்!

போர்ட்டோ ரீக்கோவில் உருவாகும் நிலையை உன்னிப்புடன் கேட்டறிந்தார் அறிஞர் அண்ணா

சர்க்கரைத் தயாரிப்பு முறையைத் தமிழகத்து நிலையுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதில் அரிய கவனம் செலுத்தினார்

சான் சுவான், மே 1—

போர்ட்டோ ரீக்கோ தீவில் இரண்டு நாட்கள் தங்கிய பின்பு, தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், செவ்வாய் மாலை மீண்டும் அமெரிக்கப் பெருநிலத்துக்குத் திரும்பினார்.

அவர், பிளோரிடா, கலிபோர்னியா, ஹாவாய் ஆகிய மாநிலங்களில் சுற்றுப்பயணம் செய்வார். மே 4-ம் நாள், ஹாவாயில், அண்ணா அவர்களின் அமெரிக்கச் சுற்றுப் பயணம் முடிவடையும்.

மே 15-ம் நாள் அண்ணா அவர்கள், சென்னை திரும்புவதாக முதலில் திட்டமிடப்பட்டிருந்தது; ஆனால் முன்னதாகவே அவர் திரும்ப விரும்புவதால், அமெரிக்கப் பயணத்தில் ஒரு நாளும், ஜப்பானியப் பயணத்தில் ஒரு நாளும் குறைத்துக்கொள்ள அவர் விரும்புவதாக அவரது குழுவைச் சேர்ந்த ஓர் அதிகாரி கூறினார்.

இந்த மாறுதலின் விளைவாக, கான்சாஸ் மாநிலத்திலுள்ள மன்ஹாட்டன்; கலிபோர்னியா மாநிலத்திலுள்ள லாஸ் ஏஞ்சல்ஸ்; சான்பிரான்சிஸ்கோ; ஹாவாய்த் தீவிலுள்ள ஹானலூலு ஆகிய நகரங்களுக்கு அவர் ஒரு நாள் முன்னதாகவே போய்ச் சேருவார்.

எனவே, மே 5-ம் நாளுக்குப் பதில் 4-ம் நாளே அவர் அமெரிக்காவிலிருந்து புறப்படுவார்.

போர்ட்டோ ரீக்கோ வளர்ச்சி திட்டங்கள்

அண்ணா நேரில் கண்டார்

திங்கட்கிழமையன்று அண்ணா அவர்கள், போர்ட்டோ ரீக்கோ நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றைப் பார்வையிட்டார்.

ஞாயிறன்று மாலை அவர் இங்கு வந்து சேர்ந்தபோது, விமான நிலையத்தில், போர்ட்டோ ரீக்கோ அரசுத் தலைமை வரவேற்பு அதிகாரி ஜோயல் எஸ்ட்ரடா, வெளி உறவுத் துறைத் துணைச் செயலாளர் ரபேல் ரூபின் முதலியோர் வரவேற்றனர்.

திங்கள் காலையில், சமுதாய நலத் திட்டத் தலைமையகத்துக்குச் சென்றார்; வேளாண்மைத் துறை, இந்த அலுவலகத்தை நடத்துகிறது. இங்கு நிர்வாக இயக்குநர் லூசியானோ பியூர்ட்டஸ் என்பவருடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்; பின்னர் அவரது விருந்தாளியாக அவருடன் பகலுணவு உண்டார்.

வீடு கட்டும் திட்டம்

அரசாங்கத் திட்டம் ஒன்றின் கீழ், போர்ட்டோ ரீக்கோ குடியானவர்கள் எவ்வாறு தம் சொந்த வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள் என்று இயக்குநர் பியூர்ட்டஸ், அண்ணா அவர்களுக்கு விரிவாக விளக்கினார்.

இத்திட்டத்தின்கீழ் குடியானவர்கள் வீடு கட்டுவதில், தம் அண்டை அயலாளர்களின் உதவிகளைப் பெறுகின்றனர்.

"ஆயிரக்கணக்கான நாட்டுப்புறக் குடும்பங்கள், இத்திட்டத்தின்கீழ், குறைந்த செலவில் வீடுகள் கட்டிக்கொள்ள முடிந்துள்ளது" என்று அண்ணா அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

சர்க்கரைத் தொழிலில் கவனம் செலுத்தினார்

போர்ட்டோ ரீக்கோவில், கரும்பு ஆலை ஒன்றையும் அண்ணா அவர்கள் சுற்றுப் பார்த்தார்; 'போர்ட்டோ ரீக்கோவின் கரும்புச் சாகுபடி முறையையும்—சர்க்கரைத் தயாரிப்பு முறையையும் தமிழகத்தில் உள்ள முறையுடன் ஒப்பிட்டுப் பார்க்க விரும்புகிறேன்' என, அண்ணா அவர்கள், அதுபோது தெரிவித்தார்.

போர்ட்டோ ரீக்கோ கவர்னர் ராபர்ட் சஞ்செஸ் வைலல்லா சார்பில் வெளி உறவுத் துறைச் செயலாளர் கல்லர்மோ இரிசாரி, துணைச் செயலாளர் ஏஞ்சல் கால்டரான் குரூஸ் ஆகியோரைத் திங்கட்கிழமை பிற்பகலில் தமிழக முதலமைச்சர் சந்திக்க இருந்தார்.

நிகழ்ச்சிகள் ரத்து

தமிழக முதல்வருக்காக செவ்வாயன்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டன. ஏனெனில், [illegible]நாட்டில் தங்குவதை அவர் [illegible] நாள் குறைத்துக்கொள்ள [illegible]வு செய்தார்.

திங்கள் இரவே, விமானத்தில், பிளோரிடா மாநிலத்திலுள்ள மியாமி நகருக்கு அண்ணா அவர்கள் சென்றார்.

அறிஞர் அண்ணா கண்ட கான்சாஸ் அரசாங்கப் பல்கலைக் கழகச் சிறப்பு

மன்ஹாட்டன், மே 1—

அண்ணா அவர்கள், கான்சாஸ் அரசாங்கப் பல்கலைக் கழகத்துக்கு (கே. எஸ். யூ) இன்று வருகை தந்தார்.

அமெரிக்க நிலமானியக் கல்வி நிலையமான கே எஸ் யூ., அனைத்துலகப் புகழ்பெற்றது. பல அந்நிய நாட்டு மாணவர்கள் இங்கு படித்துப் பட்டம் பெற்றிருக்கின்றனர்.

நூறு ஆண்டுகளுக்குமுன்னால் மாநில வேளாண்மைக் கல்லூரியாகத் தோற்றுவிக்கப் பெற்ற கே. எஸ் யூ., இன்று அனைத்துலகக் கல்விக் கழகமாக விளங்குகிறது. அதன் செல்வாக்கும் அக்கறையும் உலகளாவியவை. இதிலே தென் ஆசியாவுக்கு—அதுவும் குறிப்பாக இந்தியாவுக்கு—சிறப்பிடம் உண்டு.

1886-ல் முதல் அந்நிய நாட்டு மாணவர் ஒருவர் கே. எஸ். யூ. பட்டம் பெற்றார். அதுமுதல் இதுவரை, 1638 வெளிநாட்டு மாணவர்கள் பட்டம் பெற்றிருக்கின்றனர். 85 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள். இதிலும் இந்தியாவுக்குத்தான் முதலிடம்; 512 இந்தியர்கள் கே. எஸ். யூ. பட்டம் பெற்றிருக்கின்றனர்.

1956-ம்ஆண்டுமுதல் கே.எஸ் யூ., இந்தியாவில் தொழில் நுட்ப யோசனையும் உதவியும் அளித்து வந்திருக்கிறது; அதனுடைய மன்ஹாட்டன் வளைவுக்குள் நூற்றுக்கணக்கான இந்திய மாணவர்களுக்கும், பிற தென் ஆசிய மாணவர்களுக்கும் பயிற்சி அளித்திருக்கிறது. இந்த முயற்சிகளுக்கு ஆதரவாகத் தென் ஆசியப் படிப்புகள் திட்டம் ஒன்று 1966-ல் தோற்றுவிக்கப் பெற்றது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளின் மாணவர்க்குப் பட்டப் படிப்பும், ஆராய்ச்சிப் படிப்பும் இந்தத் திட்டத்தின்கீழ் அளிக்கப்படுகின்றன.

நடப்பு கல்வி ஆண்டில் 249 பட்டப் படிப்பு மாணவர்களும், 36 பட்டம்பெற்ற ஆராய்ச்சி மாணவர்களும் இந்தத் திட்டத்தில் பங்கு கொள்கின்றனர்.

மனித இன வரலாறு, வேளாண்மைப் பொருள் இயல், கலை, வரலாறு, புவியியல், தென் ஆசிய நாகரிகங்களை ஆராயும் சிறப்புப் பாடம் ஆகியவை இந்தத் திட்டத்தில் உள்ளன.

உலகின் உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதிலும் கே. எஸ். யூ நாட்டம் கொண்டுள்ளது.

பல்கலைக் சழகத்தின் உணவு—தீவன ஆராய்ச்சி நிலையம், கோதுமை உணவின் ஊட்டச் சத்தை அதிகரிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

அண்ணா காணும் லாஸ் ஏஞ்சலஸ் நகர்

விமானத் தயாரிப்புத் தொழிற்சாலைகள் நிறைந்தது

கலிபோர்னியா மாநிலத்தில் இருக்கும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு மே 1-ம் நாள் அண்ணா அவர்கள் வருகை தந்தார்.

அமெரிக்காவில் விமானங்கள் தயாரிப்புக்குப் பெயர்போன நகரம் லாஸ் ஏஞ்சல்ஸ். அத்துடன், திரைப் படத் தொழிலுக்குக் கேந்திரமாக விளக்கும் ஹாலிவுட்டும் இங்குதான் இருக்கிறது.

ஆண்டுதோறும் கோடிக்கணக்கான உல்லாசப் பயணிகளை ஈர்க்கும் அமெரிக்காவின் மூன்றாவது பெரிய நகரமான லாஸ் ஏஞ்சல்சில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், இரண்டு நாட்கள் தங்கியிருப்பார்.

நகரத்தில் இருக்கும் கல்வி நிலையங்கள், விஞ்ஞானக்கூடங்கள், பண்பாட்டுக் கேந்திரங்கள் ஆகியவற்றுக்குச் செல்வார்.

குறிப்பாக விமானத் தயாரிப்புத் தொழிற்சாலைகளுக்கும் திரைப் படத் தயாரிப்பு நிலையங்களுக்கும் சென்றுவர அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

விமானம் கட்டும் தொழில்தான் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் பொருளாதாரத்தில் ஆதிக்கம் பெற்றிருக்கிறது. முதலாவது உலகப் போருக்கு முன்பே இந்தத் தொழில் இங்கு தோன்றியது.

எழில் நகரின் தோற்றம்

விமானத் தொழிலுக்குப் பணியாற்றும் கம்பெனிகள் 10,000 முதல் 12,000 வரை தென் கலிபோர்னியா முழுவதிலும் பரவி இருக்கின்றன. லாஸ் ஏஞ்சலஸ் என்று சொன்னாலே, கண் கவரும் ஒளிமிக்க நியோன் விளக்குகளும், பளபளப்பான ஹாலிவுட்டும், நூற்றுக்கணக்கான மைல் நீளமுள்ள நெடுஞ்சாலைகளும், பல்லாயிரக்கணக்கான மோட்டார் கார்களும், பச்சை பசேல் என்று இருக்கும் புல்வெளியுடன் கூடிய தனித் தனி வீடுகளும் கண்முன் தோன்றும். இவை எல்லாம்தான் லாஸ் ஏஞ்சலஸ் நகரம்.

60 ஆண்டுகளுக்கு முன் இந்நகரின் மக்கள் தொகை 1,90,000-தான்; இன்று 60 இலட்சத்துக்கு மேலாகும். 'மோட்டார் கார் யுகமான இருபதாம் நூற்றுண்டின் குழந்தை' என்று கூறலாம் இந்த நகரை!

மக்கள் உழைப்பு

நல்ல வாழ்க்கை, வளர்ச்சி, வளம் நாடி மக்கள் இந்த இடத்துக்குக் குடிபெயர்ந்து வந்தனர். கடலும் மலைகளும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சூழ்ந்திருக்க—இயற்கை மகிழ்ச்சி தரும் தட்ட வெட்ப நிலையை வழங்கியிருக்கிறது.

ஆயினும், மக்களின் கடுமையான உழைப்புதான் நகரின் இணையற்ற வளர்ச்சிக்குப் பெரும் காரணம். இயற்கையாக இருந்த குறைபாடுகளை அவர்கள் திட்டமிட்டு நீக்கிக் கொண்டனர்.

'தண்ணீர் இல்லை' என்று தெரிந்துகொண்டால், மக்கள் தாமே நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் ஆறுகளில் அணை கட்டி தண்ணீர் வசதி செய்து கொள்வர்.

நல்ல பாசன வசதியும், நீண்ட விளைச்சல் காலமும் வெயிலும் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சுற்றியுள்ள இடத்தை செழிப்புமிக்க வேளாண்மைப் பிரதேசமாக்கியுள்ளன.

துறைமுகம் உருவாக்கினர்

துவக்க நாட்களில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்குத் துறைமுகம் கிடையாது. உண்மையில் 19-வது நூற்றுண்டின் மத்தியில் அது அமெரிக்க அரசின் ஆளுகைக்குட்பட்டபோது பசிபிக் பெருங்கடலிலிருந்து 48 கிலோ மீட்டருக்கப்பால் இருந்தது. 1899-ல் சமுதாயம் பெருகத் தொடங்கியது; சான் பீட்ரோ நகரைக் கைப்பற்றி, துறைமுகம் ஒன்றைக் கட்டினர் மக்கள்.

பலவகையான மராமத்துப் பணிகள் செய்தும் 24 கிலோ மீட்டர் நீளத்துக்குக் கல்லடை ஒன்றும் அமைத்தனர். இப்பொழுது லாஸ் ஏஞ்சல்ஸ்க்கு அருமையான துறைமுகம் ஒன்று உள்ளது.

விமானம் கட்டும் தொழில் தவிரவும் மின்னணுத் தொழில்கள், மோட்டார் கார் தொழில், ரேடியோ-டெலிவிஷன் தொழில்கள், உணவுத் தயாரிப்புத் தொழில்கள், பிளாஸ்டிக், பெட்ரோல் தொழில்கள் திரைப்படத் தொழில் முதலியன நன்றாக வளர்ந்துள்ளன.

ஹாலிவுட்-திரைப்படத் தொழிலின் கேந்திரம்!

ஹாலிவுட், லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் ஒரு மாவட்டமாகும். அமெரிக்காவின் திரைப் படத் தொழிலுக்குக் கேந்திரம் என்றும் என்றும் அழைக்கப்படுவதுண்டு.

தென் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் திரைப்படத் தொழில் நுட்பங்கள் 1929-ம் ஆண்டு முதல் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்தத் துறையில் பாடத் திட்டம் வகுத்துப் பயிற்சி அளித்த முதல் பல்கலைக் கழகம் அமெரிக்காவிலேயே இதுதான்.

பஸடேனா அருகில் இருக்கும் தென் கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தில் திரைப்படம் சம்பந்தமான அமெரிக்க நூல்களும், வெளி நாட்டு நூல்களும் ஏராளமாக இருக்கின்றன. வெளி நாடுகளிலிலிருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இந்தப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கொள்கின்றனர். இவர்களில் பலர் திரைப்படப் பிரிவில் படிக்கின்றனர்.

1850-ம் ஆண்டில் இந்த நகரில் வசித்து வந்தவர்கள் மொத்தம் 1,600 பேர்தான். அவர்களில் யாராவது ஒருவர் உயிர்பெற்று எழுந்து வந்தால் இந்நகரை அவரால் நம்ப முடியாது.

'முறுவல்பூத்த முகத்துடன் தமிழக உடையில் காட்சியளிக்கும் இந்தப் பெருமகன் யார்?'

இளவேனில் மலர்ந்ததும் சுற்றுலா வந்த அனைவர் மனதிலும் அண்ணா இடம் பெற்றார்

'பெருந் தலைவர்' எனப் புரிந்துகொண்டனர்--படத் தொகுப்புக்குச் சிறப்பிடம் தருவதில் முனைந்தனர்!

வாஷிங்டன், ஏப். 30—

இளவேனில் காலம் மலர்ந்தது முதல் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தலைநகரில் வந்து குவியும் எண்ணிறந்த அமெரிக்கச் சுற்றுலாக்காரர்கள் பலரது கவனத்திலும், பெரும் அளவுக்கு தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் இடம் பெற்றார்! இவர்களில் பெரும்பாலோர், அவரைப் படமெடுத்த வண்ணமிருந்தனர்.

குறிப்பாக, லிங்கன் நினைவாலயம், ஜான் கென்னடி கல்லறை ஆகிய இடங்களுக்கு அண்ணா அவர்கள் சென்றிருந்தபோது, ஏராளமானவர்கள் படமெடுத்தனர். அவரது பெயர் அவர்களுக்கு ஒருவேளை தெரியாமலிருந்திருக்கலாம்; ஆனால், அவருக்கு அளிக்கப்பட்ட 'சிறப்பு' (வி. ஐ. பி.) மரியாதைகளிலிருந்து, 'அவர் ஒரு பெருந் தலைவர்' என்பதை அவர்கள் புரிந்துகொண்டனர். எனவே, நாடு நெடுகிலுமிருந்து தலைநகர் வந்த பலரது படத் தொகுப்புப் புத்தகத்தில் அண்ணாவின் படங்கள் இடம் பெறுமென்பது உறுதி.

'முறுவல் பூத்த முகத்துடன் தமிழக உடையில் காட்சியளித்த இந்தப் பெருமகன் யார்' என்று சரியாகக் கண்டுபிடிப்பதில் அவர்கள் முனைவார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில், இந்தப் படங்கள் அவர்கள் அமெரிக்க நாட்டின் தலைநகரில் எடுத்தவையாயிற்றே!

குன்றாத ஆற்றலுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்!

ஏப். 30-ம் நாள் அதிகாலை முதல் கிட்டதட்ட நள்ளிரவு வரையில் ஏராளமான அலுவல்கள் கொண்ட தமது நிகழ்ச்சி நிரல்களை அன்றுடம் முதல்வர் உற்சாகத்துடன் நிறைவேற்றிவைப்பது அமெரிக்கர்களைக் கவர்ந்துள்ளது.

கண்களில் ஒரு ஒளி—குன்றாத ஆற்றல்—உடல் நலம் ஆகியவற்றிர்கு அவர் ஓர் இலக்கணமாகத் திகழ்ந்தார்!

எல்லா நிகழ்ச்சிகளையும் குறித்த நேரத்தில் கவனித்தார்; தாமாகவே சில நிகழ்ச்சிகளையும் சேர்த்துக்கொண்டார்.

விருந்தாளியாக ஏற்க ஏராளமானோர் ஆவல்

தமிழகத் தலைவரைத் தமது விருந்தாளியாக ஏற்றுக்கொள்ளப் பலர் விருப்பம் தெரிவித்தார்கள் என்றும், அனைவருடைய அழைப்புகளையும் ஏற்றுக்கொள்ள இயலாது போயிற்று என்றும் முதல்வரின் நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்கு செய்த அமெரிக்கர்கள் கூறினர். பலரிடமிருந்து வந்த அழைப்புத் தந்திகள் முதல்வரிடம் காட்டப்பட்டன.

கலிபோர்னியாவில் அறிஞர் அண்ணா

சிறப்புமிக்கதோர் வரவேற்பு

கலிபோர்னியா, மே 1—

• தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள், கான்சாஸ் நகரிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு இன்று மாலை இங்குவந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் சிறப்பு மிக்கதோர் வரவேற்பு அவருக்கு அளிக்கப்பட்டது.

கான்சாஸ் பல்கலைக் கழகத்தில் அறிஞர் அண்ணா

மிசோரி, மே. 1—

தமிழக முதல் அமைச்சர் அண்ணா அவர்கள், கடந்த செவ்வாயன்று காலையில் இங்கு வந்து சேர்ந்தார். வேளாண்மைக்குப் புகழ்பெற்ற இந்தப் பகுதியில் அவர் இரு நாட்கள் தங்குகிறார்.

கான்சாஸ் மாநிலத்தில் மன்ஹாட்டன் நகரிலுள்ள கான்சாஸ் அரசாங்கப் பல்கலைக் கழகத்தின் விருந்தாளியாகத் தங்கியிருக்கிறார்.

டாக்டர் வாரன் பிரால், பேராசிரியர் வில்லியம் ரிச்சர் ஆகிய இருவரும் நேரில் வந்து முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு நல்வரவு கூறினர். இவர்கள் ஏற்கனவே இந்தியாவுக்கு வந்தவர்கள்.

மொழி ஆராய்ச்சி

பேராசிரியர் ரிச்சர் ஓர் அரசியல் அறிஞர். 1965–66-ல் இந்தியாவுக்கு வந்து, இந்தியாவின் மொழிப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ச்சி நடத்தியவர். டாக்டர் பட்டம் பெறுவதற்காக, 'இந்தியாவில் மொழி அரசியல்' என்னும் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி வருகிறார். தமது கட்டுரையின் நகல் ஒன்றை அவர் அண்ணா அவர்களிடம் வழங்குவார்.

செவ்வாய்க்கிழமை பிற்பகலில் அண்ணா அவர்கள், ரோஜர் பைன் என்பவரது பண்ணைக்குச் சென்றார்.

இளைஞர் பைன், தமது தந்தையுடன் இந்தப் பண்ணையை நடத்துகிறார்.

இந்திய மாணவர்களுடன் தேநீர் அருந்தினார்

செவ்வாய் காலையில், கான்சாஸ் பல்கலைக் கழகத்தில் படிக்கும் இந்திய மாணவர்களுடனும் அவர்களது அமெரிக்கத் தோழர்களுடன் தமிழக முதல்வர் தேநீர் அருந்தினார்.

பல்கலைக் கழகத்தின் கலை—விஞ்ஞானக் கல்லூரி டீன் டாக்டர் ஜான் சாமர்ஸ் இரவு விருந்தளித்தார்.

புதன்கிழமையன்று கோழிப் பண்ணை ஒன்றிற்குச் சென்றார்; பல்கலைக் கழகத்தின் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வையிட்டார்; பல்கலைக் கழக வேளாண்மைப் பிரிவுத் துணைத் தலைவர் டாக்டர் கிளன் பெக் முதலிய பல்கலைக் கழக அதிகாரிகளுடன் பகல் விருந்துண்டார்.

இந்தியப் பிரச்சினைகள் குறித்து பல்கலைக்கழக மாணவர்களுடன் அண்ணா உரையாற்றினார்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டுக்கொடுக்க முன்வர மாட்டார்கள்.

எனவே, இப்போதைக்கு ஒரு தொழிற்சாலையில் எந்தெந்தத் தொழிற்சங்கத்துக்கு எவ்வளவு பலம் இருக்கிறதோ அந்த விகிதாச்சார அடிப்படையில் ஒவ்வொரு சங்கத்துக்கும் பிரதிநிதித்துவம் அளித்து ஒன்றுபட்டு பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்தலாம்; பிறகு காலப்போக்கில், 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்கிற சூழ்நிலையை மெல்ல மெல்ல ஏற்படுத்த முயற்சி செய்யலாம்.

எனவே, தொழிற் சங்கப் பணிகளில், அனைவரும், 'தொழிலாளர்' என்ற உணர்வோடு தொழிலாளர்களுக்குரிய கடமையை ஆற்ற வேண்டும்; மேலும் மேலும் உரிமைகளைப் பெறப் பாடுபட வேண்டும்; அதற்கான முயற்சிகளெல்லாம் வெற்றி பெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்."

ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூர்யநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தலைமைக் கழக அறிக்கை: 4/68

தென்னாற்காடு மாவட்ட

சிற்றூர் — பேரூர்க் கிளைகள்; நகர — பெருநகர வார்டு கிளைகள் தேர்தல்கள் தேதி மாற்றம்

தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் மே 4, 5 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சிற்றூர்—பேரூர்க் கிளைகள்; நகர—பெருநகர வார்டு கிளைகளின் தேர்தல்கள்,

மே 15 அன்று — ஒரே நாளில்

நடைபெறும் என்பதை, தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சிற்றூர்—பேரூர்; நகர—பெருநகரக் கழக நிர்வாகிகளுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மற்ற மாவட்டங்களில்—ஏற்கனவே அறிவித்தபடி மே 4, 5-ம் நாட்களில்—தேர்தல்கள், முறைப்படி நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

'அறிவகம்', சென்னை-13
30—4—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

குமரி மாவட்ட தி.மு.க.

சிற்றூர்-பேரூர்; நகர—பெருநகர உட்கிளைகளின் தேர்தல்கள்

ஆணையாளர்
தோழர் கே.எம். கண்ணபிரான்

மே 4, 5 ஆகிய நாட்களில் குமரி மாவட்டத்திலுள்ள சிற்றூர் — பேரூர்க் கிளைகளின் தேர்தல்களைக் கண்காணிக்கவும், நாகர்கோயில் பெருநகரத்தில் அமையும் உட்கிளைகளின் தேர்தலை நடத்தி வைக்கவும் தலைமைக் கழகச் சார்பான தேர்தல் ஆணையாளராகச் சென்னை மாவட்ட முன்னாள் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள், 3—5—68 காலை நாகர்கோயில் வந்து சேருகிறார்.

நாகர்கோயில் பெருநகர உட்கிளைத் தேர்தல்கள் தோழர் கண்ணபிரான் அவர்கள் மேற்பார்வையிலும், அவரால் நியமிக்கப்படும் தோழர்களை ஆணையாளராகக் கொண்டும் நடைபெறும்.

குமரி மாவட்டத்திலுள்ள சிற்றூர் — பேரூர்க் கிளைகளின் தேர்தல்கள் குறித்து கழகச் செயலாளர்களும், அமைப்பாளர்களும், தங்களுக்குத் தலைமைக் கழகச் சார்பான தகவல்கள் — விளக்கங்கள் தேவைப்படுமாயின், நாகர்கோயிலில் தோழர் கண்ணபிரான் அவர்களிடம் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
சென்னை-13
2—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

புதுவை பெருநகரம்

புதுவை மாவட்டத்தில் — புதுவை பெருநகரமாக அமையப் பெற்றிருப்பதால், புதுவைப் பெருநகர உட்கிளைக் கழகத் தேர்தல்கள், மே 4, 5 ஆகிய நாட்களில் ஏற்கனவே அறிவித்தபடியும் முறைப்படியும் நடைபெற வேண்டும்.

'அறிவகம்'
சென்னை-13
2—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

சென்னை 40-வது வட்ட தோழர்கட்கு:

"சென்னை 40-வது வட்டத்தில் உறுப்பினர் உரிமைச் சீட்டு இதுவரையில் பெறாத தோழர்கள் 4—5—68 முதல் 15—5—68 வரை காலை 7-மணிமுதல் 9-மணிக்குள், அஷ்டபுஜம் ரோடு 50-எண்ணுள்ள இல்லத்தில் வந்து என்னிடம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என்று செயலாளர் து.கணபதி அறிவிக்கிறார்.

நகர—பெருநகர உட்கிளைத் தேர்தல்கள்

முக்கிய அறிவிப்பு

தமிழ்நாட்டின் எல்லா நகர—பெருநகரங்களிலும், அண்மையில் அரசின் திட்டப்படியும், அறிவிப்புப்படியும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்ட வார்டுகளின் அடிப்படையிலேயே, மே 4 5 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் நகர—பெருநகரக் கழக உட்கிளைகளின (வார்டு கிளைகளின்) தேர்தல்கள் முறைப்படி நடைபெற வேண்டும்.

'அறிவகம்', சென்னை-13
1—5—68

தலைமைக் கழகம் (தி.மு.க.)

தி. மு. கழகக் கிளைகளின் செயலாளர்கள், அமைப்பாளர்கட்கு

முக்கிய அறிவிப்பு

ஒவ்வொரு தி. மு. கழகக் கிளையின் மொத்த உறுப்பினர் விவரங்களைத் தெரிந்துகொள்ள விரும்பும் கழக உறுப்பினர்கள்—அந்த விவரங்களைத் தடையின்றி தெரிந்துகொள்ளும் முறையில்—அந்தந்தக் கிளையின் செயலாளர், அல்லது அமைப்பாளர், தம்மிடமுள்ள உறுப்பினர் விவரப் பட்டியலைப் பாதுகாப்பான இடத்தில்—வசதியாகப் பொது உறுப்பினர்கள் பார்வைக்கு வைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

தலைமைக் கழகம் (தி.மு.க.)

கோவை நகர உட்கிளை (வார்டு கிளை)கள் தேர்தல்கள்

ஆணையாளர்
தோழர் நீலநாராயணன்

கோவை நகரத்தின் 34 வார்டுகளிலும் மே, 4, 5 ஆகிய நாட்களில் நடைபெறவிருக்கும் உட்கிளைத் தேர்தல்களை நடத்தி வைக்கும் ஆணையாளராகத் தலைமைக் கழகச் சார்பில் சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர்: நீலநாராயணன் அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தோழர் நீலநாராயணன் அவர்கள் 3—5—68 காலை கோவை நகர் வந்து சேர்வார்.

கோவை நகரின் வார்டு கிளைகளில் [illegible]டைபெறும் தேர்தல்களைக் [illegible]ண்காணிக்கவும் தலைமைக் [illegible]ழகச் சார்பில் ஆவன செய்யவும் தோழர் நீலநாராயணன் அவர்களுக்கு உறுதுணை புரிந்தும் உடனிருந்தும் தேர்தல் பணிகளில் ஒத்துழைக்குமாறு கோவை வட்ட நகர வார்டுகளின் செயலாளர்களும், நிர்வாகிகளும் தோழர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
சென்னை-13
2—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

தலைமைக் கழக அறிக்கை 5/68

செங்கற்பட்டு மாவட்டம்

திருவொற்றியூர் நகரம்

50-ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் எண்ணிக்கை கொண்ட நகரமாக அறிவிக்கப்படுவதால், அது, கழகச் சட்ட திட்டம் விதி 7-பிரிவு 5-ன்படி உட்கிளை அமைத்துக்கொள்ளவும், விதி 7-பிரிவு 9, 10, 11 ஆகியவைகளின்படி பெரு நகரக் கிளை அமைத்துக்கொள்ளவும் தகுதிபடைத்த பெரு நகரமாக இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

'அறிவகம்'
சென்னை-13
2—5—68

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

3—5—68

வலங்கைமான்

நகர தி. மு. க. சார்பில், மாலை 6-மணிக்கு சேணியர் தெருவில்; தலைவர்: எம். ஏ. பாட்சா; பேசுவோர்: மதுரை சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., ந. சாமிநாதன், மு. விசுவநாதன்.

சென்னை 15-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு மண்ணடி பவளக்காரத் தெருவில்; தலைவர்: ந. முருகேசன்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, க. அறிவழகன் எம்.எல்.சி., நீலநாராயணன், அ. அ. ஜின்னா பி.ஏ., ஆலந்தூர் எஸ். பாலன், ந. இராமதாசு, மற்றும் பலர்.

மேலப்பாளையம்

தி. மு. க சார்பில் மாலை 7-மணிக்கு பசார் திடலில்; தலைவர்: பி. எஸ். மருது எம்.சி.; பேசுவோர்: எம். எஸ் சிவசாமி எம்.எல்.ஏ., எட்மண்ட் எம்.எல்.ஏ., செ. கா. மு. யூசுப் எம்.சி., நெல்லை நெடுமாறன், நெ. மு. அபூபக்கர் எம்.சி., கி. மீ. காஜா மைதீன்.

புச்சிரெட்டிபள்ளி

தி.மு.க. துவக்க விழா; மாலை 6-மணிக்கு; தலைவர்: கே. என். சோணாசலம்; திறப்பாளர்: அமைச்சர் மா. முத்துசாமி; பேசுவோர்: டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., புலவர் மி. ச. நடேசன், கே எஸ். கணேசன், பரந்தாமன் பி.எஸ்சி., கே. நரசிம்மன், பி. கோவிந்தசாமி, முகுந்தரெட்டி, ஏர்ரய்யா, பி. முருகேசன், டி. பெரியசாமி, அ. எல்லப்பன், சங்கரன். (மாலை 4-மணிக்கு சைக்கிள் ஊர்வலம் நடைபெறும்.)

சென்னை 46-வது வட்டம்

முத்தமிழ் படிப்பக 10-வது ஆண்டு நிறைவு விழா; மாலை 7-மணிக்கு கீழ்ப்பாக்கம் குட்டியப்ப கிராமணி தெருவில் (மனநோய் மருத்துவமனைக்கு அருகில்); தலைவர்: கா. வி. வெங்கடேசன்; பேசுவோர்: வி எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வேலூர் டி. நாராயணன் எம்.சி., முரசொலி அடியார், இரா. இளம்பரிதி, சி. நாகையா, இர. அரங்கநாதன் மற்றும் பலர்.

4—5—68

பந்தநல்லூர்

வட்டார தி. மு. க. சார்பில் பாராட்டுக் கூட்டம்; மாலை 6-மணிக்கு கடை வீதியில்: தலைவர்: சுந்தரம்; பாராட்டுப் பெறுபவர்: கோ.சி. மணி எம்.எல்.சி.; பாராட்டுரை வழங்குவோர்: என். கிட்டப்பா எம்.எல்.ஏ., கா. சுப்ரவேலு எம்.பி., மு. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., எஸ். ஆர். இராதா எம்.சி., ப. தங்கையன், மற்றும் பலர்.